**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்.**
**முன்னிலை திருமதி.M. முருகானந்தி, B.Sc., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, வேடசந்தூர்

2018ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்: 69/2015**

திரு.எம்.ஆர்.லோகநாதன் ... வாதி

/ எதிர் /

திரு.சக்திவேல் ... பிரதிவாதி

இந்த வழக்கானது என் முன்பாக 24.07.2018ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.இரத்தினம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி அழைக்கப்பட்டும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைத்தரப்பாக்கப்பட்டும், வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று(24.08.2018) இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.....

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், அதன் தொடர் பரிகாரமாக தாவாச் சொத்துக்களை வாதி அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை வழங்க கோரியும் வாதிகளால் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2.வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**

வாதி தரப்பில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அதில், ஆதியில் தாவா 1லக்கச் சொத்துக்கள், E.சித்தூர் கிராமம், ரெட்டியபட்டியிலிருக்கும்

சடையப்பகவுடர் மனைவி பாப்பாயம்மாளுக்கு சுயராஜ்ஜித பாத்தியப்பட்ட சொத்துக்களை மேற்படி கதிரியப்பகவுண்டர் மனைவி ஆலம்மாளுக்கு சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் 05.12.1963ம் தேதி தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் சுவாதீனம் கொடுத்துவிட்டதாகவும், அதன்படி மேற்படி ஆலம்மாள் தாவா 1லக்கச் சொத்துக்களை அனுபவித்து வந்ததாகவும், இதர சொத்துக்கள் மேற்படி ஆலம்மாளின் கணவர் கருதியப்பகவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்ததாகவும், தாவா 1லக்கச் சொத்துக்களுடன் அதே சர்வே எண்.468ல் 1 ஏக்கர் 80 செண்டும், 2லக்க சொத்தான சர்வே எண்.904/1ல் 0.84 செண்டும் ஆக மொத்தம் 2.64 செண்டுடன் இதர சொத்துக்களையும் சேர்த்து வாதியின் வெண்டாருக்கு அவர் தந்தை கதிரியப்பக்கவுண்டர் 30.03.1992ம் தேதியில் ஒரு உயில் சாசனம் எழுதி எரியோடு சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும், மேற்படி கருதியப்பகவுடர் 15.08.1992ம் தேதியில் இறந்தபின் தாவா சொத்துக்களை வாதியின் வெண்டார் சர்வசுதந்திரமாக அனுபவித்து வந்ததாகவும், மேற்படி உயில் சாசனம் ஊர்ஜிதத்திற்கு வந்து விட்டதாகவும், பின்னர் வாதியானவர், வாதியின் வெண்டரான பிரதிவாதியிடம் தாவாச் சொத்துக்களை மட்டும் கிரையம் பேசி கிரையத்தொகை முழுவதையும் வாதியிடமிருந்து பிரதிவாதி கோவிலூரில் உள்ள ஸ்டேட்பேங்கில் உள்ள கடனை தீர்ப்பதற்காக வாதியிடம் ரொக்கமாக ரூ.1,64,000/- பெற்றுக் கொண்டதாகவும், தாவா சொத்துக்களை 07.09.2011ம் தேதி பிரதிவாதி வாதிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டதாகவும், மேற்படி கிரையப்பத்திரத்தையும் இப்பிராதில் தாக்கல் செய்யப்படுவதாகவும், தாவாச் சொத்துக்களை வாதி கிரையம் பெற்றதும் வாதி பெயரில் பட்டா மாற்றம் செய்ய வருவாய்த்துறையில் உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இந்நிலையில் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் செய்த பின்னரும், கிரையத் தொகையை மொத்தமாக பெற்றுக் கொண்ட பின்னரும், மேலும் தொகை பறிக்கலாம் என்ற கெட்ட எண்ணத்தில் தாவாச் சொத்துக்கிளல் உள்ள வாதியின்

அனுபவத்தை பிரதிவாதி 01.04.2015ம் தேதி முதலும், தடையும் இடைஞ்சலும் செய்து வருவதாகவும், எனவே தாவா சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டவை என விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், தொடர் பரிகாரமாக தாவா சொத்துக்களை வாதி அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதியோ, அல்லது அவர் வகையறா ஆட்களோ யாதொரு தடையும், இடைஞ்சலும் செய்யாதவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை வழங்கக் கோரி குறிப்பிடப்பட்டுள்ளது.

**3.** இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் அழைக்கப்பட்டும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலை தரப்பாக்கப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய அம்சம் யாதெனில் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா, இல்லையா, என்பதேயாகும்.

**5.** வாதி தரப்பில் வாதி லோகநாதன் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6. தீர்வு</u>**

வாதி தரப்பு கேட்கப்பட்டது. சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1 தாவா பிராதை தழுவி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1ன் சாட்சியத்தினை பரிசீலனை செய்து பார்க்கும் போது வா.சா.1 தனது சாட்சியத்தில் வாதி மற்றும் பிரதிவாதியின் உறவுமுறையைக் காட்டக் கூடிய ஆவணமாக வாதி தரப்பில் வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா இடத்தின் மாதிரியைக் காட்டும் வகையில் வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 02.12.1963ம் தேதி ஆலம்மாளுக்கு பாப்பாயம்மாள் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தை வா.சா.ஆ.3 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும் போதும், 30.03.1992ம் தேதிய கதிரியப்பகவுடர் பிரதிவாதி சக்திவேலுக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனம் வா.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும் போதும், 07.09.2011ம் தேதி வாதிக்கு சக்திவேல் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதை வைத்து பார்க்கும் போது மேற்படி தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதைக் காட்ட மேற்படி வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேலும், தாவா சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதைக் காட்ட மேற்படி வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

**7.** இந்நிலையில், வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து பிராது நகல் மூலம் பிரதிவாதி தெரிந்துகொண்டு அது குறித்து இல்லை என்று நிரூபணம் செய்ய பிரதிவாதிகள் முன்னிலையாகவில்லை என்பதை வைத்துப் பார்க்கும் போது வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8.** இச்சூழ்நிலையில் வாதி தன்னுடைய வாய்மொழி சாட்சியம் மூலமாகவும், சான்றாவணங்கள் மூலமாகவும் வாதி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுவதாலும் வாதிகளின் வழக்கை பிரதிவாதி மறுக்காத நிலையில் வழக்கின் அனுமானம் வாதக்கு சாதகமானது என்றே இந்நீதிமன்றம் கருதி வாதி கோருகின்ற பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**9.** எனவே, தாவா சொத்துக்கள் வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், அதன் தொடர் பரிகாரமாக தாவாச் சொத்துக்களை வாதி அமைதியாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கின் தன்மையைக் கருத்தில் கொண்டு வாதிக்கு செலவுத்தொகை கிடைக்கத்தக்கதல்ல என்று உத்தரவிடப்படுகிறது.

**10.** இறுதியாக, இத்தாவா அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு. பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2018ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**SD/- M. முருகானந்தி**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**வேடசந்தூர்.**

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 : லோகநாதன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 1 | 04.05.2015 | கொடிவழி ஜாபிதா | அசல் |
| வா.சா.ஆ. 2 | 11.01.1985 | மாதிரி வரைபடம் | அசல் |
| வா.சா.ஆ. 3 | 05.12.963 | ஆலம்மாளுக்கு பாப்பாயம்மாள் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ. 4 | 30.03.1992 | கதிரியப்பகவுடர் சக்திவேலுக்கு எழுதிக்கொடுத்த உயில் சாசனத்தின் | உண்மை நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ. 5 | 07.09.2011 | வாதிக்கு சக்திவேல் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் **SD/- M. முரகானந்தி** **முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி** **வேடசந்தூர்.** | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ. 6 | 13.04.2015 | கணிணி சிட்டாவின் | உண்மை நகல் |
| வா.சா.ஆ. 7 | 13.04.2015 | கணிணி சிட்டாவின் | உண்மை நகல் |
| வா.சா.ஆ. 8 | | வாதி தாவா சொத்துக்களுக்கு செலுத்திய கிஸ்தி ரசீதுகள் | அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள்** இல்லை

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** இல்லை

**SD/- M. முருகானந்தி**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**வேடசந்தூர்.**